செ. கு. எண்: 003 நாள்: 07.01.2018

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 7.1.2018

பெரம்பலூர் மாவட்டம், பாடாலூர் காவல் நிலையத்தில் முதல் நிலைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. A. செந்தில்குமார் அவர்கள் உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

தேனி மாவட்டம், தேனி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. மாரிச்சாமி அவர்கள் சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மதுரை மாநகரம், கரிமேடு போக்குவரத்து காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. R. சுந்தர் அவர்கள் சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. S. குமார் அவர்கள் உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

ஈரோடு மாவட்டம், கொடுமுடி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. ம. ராஜு அவர்கள் உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. சே. வனராஜா அவர்கள் சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாவட்டம், தமிழ்நாடு சிறப்பு காவல் 12–ம் அணியில் இரண்டாம் நிலை காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. க. தங்கசாமி அவர்கள் உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

தூத்துக்குடி மாவட்டம், ஆயுதப்படையில் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திருமதி. P. ஜான்சிராணி அவர்கள் உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், கண்டாச்சிபுரம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. சிவகுமார் அவர்கள் உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

நாகப்பட்டினம் மாவட்டம், கரியாப்பட்டினம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் (பயிற்சி) பணிபுரிந்து வந்த திரு. R. பாலசுப்ரமணியன் அவர்கள் உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், கேளம்பாக்கம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. குணசேகரன் அவர்கள் உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

கடலூர் மாவட்டம், மந்தாரக்குப்பம் காவல் நிலையத்தில் பயிற்சி உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. சி. சேகர் அவர்கள் உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. ரா. சண்முகம் அவர்கள் சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த R. வரதராஜ பெருமாள் அவர்கள் உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

மேற்கண்ட பல்வேறு நிகழ்வுகளில் உயிரிழந்த காவலர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்த மேற்கண்ட **14** நபர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**